REF:TSL:SEC:2026/26 February 13, 2026

BSE Limited
P J Towers
Dalal Street
Fort
Mumbai 400 001

Scrip Code: 509243

National Stock Exchange of India Ltd.,
5th Floor
Exchange Plaza
Bandra (E)
Mumbai - 400 051

Scrip Code: TVSSRICHAK

Dear Sir / Madam,

Sub: Publication of unaudited financial results of the company for the quarter and nine months ended 31st December 2025.

In terms of the Regulation 30 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed herewith the copy of unaudited financial results of the company published in the following newspapers:

- Business Line (English) on February 13, 2026
- Dinamalar (Tamil) on February 13, 2026

Kindly take the above on record.

Thanking you

Yours faithfully
for TVS SRICHAKRA LIMITED
CHINMOY PATNAIK

Digitally signed by CHINMOY PATNAIK
Date: 2026.02.13 12:37:38 +05'30'

Chinmoy Patnaik
Company Secretary & Compliance Officer
Membership No. A14724

Encl: as above

TVS Srichakra Limited
CIN: L25111TN1982PLC009414
Regd. Office: TVS Building, 7-B, West Veli Street, Madurai 625 001.
Tel:+91 0452 2356400, Fax: +91 0452 2443466 I Website: www.tvseurogrip.com I Email: secretarial@eurogriptyres.com
Manufacturing Unit: Vellaripatti, Melur Taluk, Madurai-625 122, Tel:+91 452 2443300

FM denies 'squeezing' States in Budget debate

FACE-OFF. Says Cong is shedding crocodile tears over rising debt

Our Bureau
New Delhi

CALLS THE SHOTS. Finance Minister Nirmala Sitharaman speaks in the Rajya Sabha on Thursday

Finance Minister Nirmala Sitharaman on Thursday mounted a forceful defence of the Budget, accusing the Congress of shedding crocodile tears over rising debt, even as it demanded that the Centre borrow more and release higher funds to States.

"Congress sheds crocodile tears about rising debt. They want us to borrow more money and also release funds to the States," the Finance Minister said while replying to the general debate on the Budget in the Rajya Sabha.

She said that the government was guided by the principle that it "cannot borrow excessively".

Rejecting the Opposition's charge that expenditure was being curtailed or that the States were being starved of funds, the Finance Minister said there had been "no denial or stoppage of funds to States on any scheme".

FOCUS ON BENGAL, TN

She argued that while the Opposition was "obsessed about outlays", her government was focused on outcomes. "We say that we will give you money, but you have to give us outcomes. We want results," she said.

Sitharaman spoke extensively on West Bengal and Tamil Nadu, two key States headed for Assembly elections, amid allegations that certain States were being shortchanged. Responding to Trinamool Congress' claims that Bengal had been ignored in the Budget, she termed the charge "misinformation", pointing to allocations under the government's Purvodaya strategy, aimed at boosting eastern India. She said West Bengal had been placed at the centre of the Budget initiatives under this framework.

In a separate exchange, the Finance Minister sparred with the Opposition over Tamil Nadu's fiscal health after DMK member P Wilson raised concerns about rising national debt. Sitharaman said debt reduction was a shared responsibility of both the Centre and the States, before citing figures to highlight what she described as a sharp rise in Tamil Nadu's borrowing in recent years.

The remarks triggered protests, with Leader of the Opposition Mallikarjun Kharge objecting to the discussion of a State's finances during a debate on the Budget.

Beyond the political crossfire, Sitharaman used her reply to underscore what she described as macroeconomic stability and structural gains. She dismissed claims that the middle class was being squeezed, arguing that higher personal income tax collections reflected formalisation and expansion rather than distress.

Silver, the star in January retail inflation; experts see headline number rising further

Shishir Sinha
New Delhi

Debuting as an independent weight category, silver jewellery added shine to first retail inflation print in January, while gold, clubbed with diamond and platinum jewellery, also contributed to the headline number at 2.75 per cent.

The retail inflation based on Consumer Price Index (CPI) with new base series of 2024 was released on Wednesday.

According to data from the National Statistic Office, inflation for silver jewellery was around 160 per cent, while for gold/diamond/platinum jewellery was around 47 per cent. Tomato had an inflation of around 65 per cent, while coconut (*copra*) and coconut oil registered inflation of 47 and 40 per cent, respectively.

SBI REPORT

Highlighting changes in new inflation number, a research report by SBI calculated the old series index and found overall inflation at 2.55 per cent in January, 20 bps lower than the new 2024 series.

However, MOSPI has calculated the new series in such a manner that there is only + 20 bps change in both the series. "We have calculated the core CPI in new series, which is at 3.4 per cent in January, compared to 4.15 per cent in the 2012 series (calculated). The decline in core is mainly due to the change in weightage in gold, which declined to 0.62 per cent in the 2024 series, compared to 1.02 per cent in the 2012 series," it said.

Personal care inflation is in double digit due to higher inflation for gold and silver. Rising prices of metal impacted core items (excluding food, fuel segments).

HIGHER WEIGHTAGE

These items now carry a higher weightage in the new series, with most prices rising 3 per cent, reflecting the impact of GST rate rationalisation barring personal effects.

"The personal effects inflation stood at 19 per cent in January, led by significantly high inflation in jewellery items, said Paras Jasrai, Associate Director at India Ratings & Research.

INFLATION TO RISE

Meanwhile, inflation is expected to pick up in the coming quarters.

However, as Jasrai said, it is expected to be within the tolerance band of the MPC. "For February, we expect retail inflation to average 3.2 per cent. Since the longer period data is not available at present, it is difficult to make any medium-to long-term prediction based on 13 months' data released at present," he said.

According to Sujan Hajra, Chief Economist at Anand Rathi Group, the print indicates a firming in price momentum, compared with the unusually soft readings seen towards the end of 2025, when food prices had kept headline inflation subdued.

Even with the uptick, inflation remains comfortably below the RBI's 4 per cent target, suggesting overall price pressures are still contained. Looking ahead, inflation is expected to edge higher gradually as base effects fade and food inflation picks up gradually," he said.

Now, the big question is how much the new series will have an impact on policy decisions.

"We don't expect the new inflation series to meaningfully influence policy decisions in the near term, with an extended rate pause likely, supported by a positive cyclical upswing and confidence effects stemming from the successful conclusion of US-India trade negotiations," said Radhika Rao, Senior Economist, DBS Bank.

CPI based on retail inflation

Change in weight

Divisions	CPI 2012	CPI 2024
Food & beverage	42.62	36.75
Pan, tobacco, intoxicants	2.38	2.99
Clothing & footwear	6.53	6.38
Housing, water, electricity, gas and other fuels	16.89	17.66
Furnishings, household equipment and routine household maintenance	3.66	4.47
Health	5.9	6.1
Transport	6.39	8.8
Information & communication	3.32	3.61
Recreation, sport and culture	1.55	1.52
Education services	3.51	3.33
Restaurants and accommodation services	3.25	3.35
Personal care, social protection and miscellaneous goods and services	4	5.03

Changes

Addition

- Rural housing
- Online media service provider/ Streaming services
- Value added dairy products
- Barley & its products
- Pen-drive & external hard disk
- Attendant
- Babysitter
- Exercise equipment

Deletion

- VCR/VCD/DVD player, hiring charges
- Radio
- Tape recorder
- Second hand clothing
- CD/DVD
- Audio/video cassettes
- Coir/rope

Source: MoSPI

Prasanna Kumar to take over as ICAI President; Mangesh Kinare named V-P

Our Bureau
New Delhi

Prasanna Kumar D

Prasanna Kumar D will be the President of the Institute of Chartered Accounts for the 2026-27 term. The ICAI also announced Mangesh Pandurang Kinare as the new Vice-President.

Prasanna will serve as Chairman of all standing committees, ex-officio member of all non-standing committees, and Editor-in-Chief of *The Chartered Accountant* Journal.

He will chair ICAI's research and development wings, Accounting Research Foundation and XBRL India, and the three welfare funds — CABF, CASBF and the S Vaidyanath Aiyar Memorial Fund.

RESPONSIBILITIES

He will also serve as Director on the boards of Institute of Social Auditors of India, ICAI Registered Valuers Organisation, The Indian Institute of Insolvency Professionals of ICAI and ICAI International ADR Centre.

He has been a Chartered Accountant since 1984 and a Fellow Member of ICAI. His leadership journey began with student-centric initiatives in SICASA and he later served as the Chairman of the Visakhapatnam Branch of ICAI in 2001-02, strengthening professional engagement and capacity building at the grassroots level.

He served on the Southern India Regional Council (SIRC) from 2007 to 2016, including as Chairman during 2013-14, enhancing regional outreach, professional development initiatives and member participation.

Mangesh Pandurang Kinare has served as the Chairman of the Professional Development Committee and the Committee on Public and Government Financial Management, Vice-Chairman of the Centre of Excellence Directorate, member of multiple ICAI committees, and of the Disciplinary Committee Bench for six years.

Kinare has also been nominated by ICAI as its representative on various national and international bodies. He has over 33 years of experience in accounting, auditing, taxation and corporate governance.

மூணாறில் வெப்பம் அதிகரிப்பு

மூணாறு, பிப்.13

கேரள மாநிலம் மூணாறில் சூரிய கதிர் வீச்சு தாக்கம் அதிகரித்ததால் பேரிடர் மேலாண்மை ஆணையம் முன்னெச்சரிக்கை விடுத்தது.

மூணாறில் தற்போது குளிர் காலம் என்றபோதும் பகலில் வெப்பம் அதிகரித்துள்ளது. நேற்று காலை குறைந்தபட்ச வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸ் ஆக இருந்தது. பகலில் 29 டிகிரி செல்சியஸ்சாக அதிகரித்தது.

சூரிய கதிர் வீச்சின் தாக்கம் அதிகரித்ததாக தெரிய வந்தது. அல்ட்ரா வைலட் விகிதம் (புற ஊதா கதிர் வீச்சை குறிக்கும் அளவீடு) மாநிலத்தில் மூணாறில் கடந்த 2 நாட்களாக அதிகரித்தது. அதன் குறியீடு அளவு நேற்று 8 ஆக பதிவானதால், மிக அதிக ஆபத்து என உணர்த்தும் வகையில் பேரிடர் மேலாண்மை ஆணையம் பொதுமக்களுக்கு 'ஆரஞ்ச் அலர்ட்' முன்னெச்சரிக்கை விடுத்தது. கதிர் வீச்சு மூலம் சரும நோய்கள் உட்பட பாதிப்புகள் ஏற்படும் என்பதால் கவனமாக இருக்க வலியுறுத்தி உள்ளது.

12 நாட்களில் 4385 டெண்டர்கள் வெளியீடு
தேர்தல் நெருங்குவதால் அரசு துறைகள் சுறுசுறு

சென்னை, பிப். 13–

சட்டசபை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளதால், தமிழக அரசு துறைகள் பல்வேறு பணிகளை மேற்கொள்ள, கடந்த 12 நாட்களில், 4,385 டெண்டர்களை வெளியிட்டுள்ளன.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான தேதி மார்ச் முதல் வாரத்தில் அறிவிக்கப்பட உள்ளது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாள் முதலே, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்து விடும். எனவே, தேர்தலுக்கு முன்னதாகவே அனைத்து துறைகளிலும், புதிய பணிகளுக்கு டெண்டர் விட அரசு தரப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, சாலை சீரமைப்பு, குடிநீர் குழாய் சீரமைப்பு, மருத்துவமனை கட்டடம் கட்டுமானம் உட்பட பல்வேறு பணிகளுக்கு, 12 நாட்களில் 4,385 டெண்டர்கள் தமிழக அரசின் பல்வேறு துறைகள் சார்பில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு உத்தேசமாக 15,000 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கலாம்.

அரசு துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் சிறப்பு திருத்தப் பணி நடந்த போது, அனைத்து துறை பணியாளர்களும் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால், டிச., மற்றும் ஜன., மாதங்களில், அரசு பணிகள் பாதிக்கப்பட்டன. அந்த மாதங்களில் அதிக அளவில் டெண்டர்கள் கோர முடியவில்லை. அப்பணிகள் முடிந்த பின், தற்போது வழக்கமான பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

மழைக்காலங்களில் சேதமான சாலைகள், குடிநீர் குழாய்கள், கட்டடங்கள் பழுது போன்றவற்றை சீரமைக்க வேண்டியுள்ளது. அதனால் தான், தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன், மக்களுக்கான அடிப்படை கட்டமைப்புகளை சரி செய்யும் பணிகளுக்கு, டெண்டர் வெளியிடப்பட்டு வருகிறது. அடுத்த ஓரிரு நாளிலும், அதிக டெண்டர்கள் வெளியிடப்படும்.

இவ்வாறு கூறினர்.

அதிக எண்ணிக்கையில் டெண்டர் கோரிய அரசு துறைகள்

துறைகள்	நேற்று மட்டும்	பிப்., மாதத்தில் நேற்று வரை
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை	229	1,147
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	303	1,101
மின்சார வாரியம்	84	756
பேரூராட்சிகள் துறை	99	414
சென்னை மாநகராட்சி	124	370

கடைசி நேரத்தில் கல்லா கட்ட முயற்சி

சென்னை மாநகராட்சி நிர்வாகம் தினமும் சராசரியாக, 40 டெண்டர்களை வெளியிட்டு, 4,000 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளை விரைந்து முடிக்க, அவசரகதியில் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

வழக்கமான அரசு டெண்டர்களை வெளியிட, பல மாதங்களாகும் நிலையில், என்றும் இல்லாத சாதனையாக, நெடுஞ்சாலை டெண்டருக்கு மூன்றே நாட்களில் அரசாணை வெளியிடுவதும், இந்த மாதத்தில், 10 நாட்களில், 248 டெண்டர்களை மாநகராட்சி வெளியிட்டிருப்பதும் எப்படி சாத்தியமானது?

இவையெல்லாம், தேர்தலுக்கு முன் கல்லா கட்ட, தி.மு.க., அரசின் தந்திரமா என்பதை, முதல்வர் ஸ்டாலின் விளக்க வேண்டும்.

– நயினார் நாகேந்திரன்,
தமிழக பா.ஜ., தலைவர்.

டி.என்.பி.எஸ்.சி., குரூப் - 2...

முதல் பக்க தொடர்ச்சி

மைய விபரங்கள், ஹால் டிக்கெட்டில் தவறாக பதிவு செய்யப்பட்டிருந்தன. இதை கண்டித்து, சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில், தேர்வர்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

பின்னர், டி.என்.பி.எஸ்.சி., தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் நேரில் வந்து பேச்சு நடத்தினார். தொழில்நுட்ப கோளாறால் குளறுபடி ஏற்பட்டதாகக் கூறி, தமிழகம் முழுதும் தேர்வு ரத்து செய்யப்படுவதாக அறிவித்தார்.

இருப்பினும், சென்னை தவிர பிற மாவட்டங்களில் குரூப் – 2, 2ஏ முதன்மை தேர்வுகள் துவங்கின. இதனால், டி.என்.பி.எஸ்.சி., வரலாற்றிலேயே, தேர்வு நடந்து கொண்டிருந்த போதே, அந்த தேர்வு ரத்து செய்யப்பட்ட நிகழ்வு அன்றைய தினம் அரங்கேறியது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம், காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டதாகவும், அவருக்கு பதிலாக வெங்கடபிரியா நியமிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஆனால், அது உண்மை அல்ல என்பதும், அரசு வட்டாரத்தில் திட்டமிட்டு கசிய விடப்பட்ட தகவல் என்பதும் தெரிய வந்தது.

இந்நிலையில், குளறுபடி நடந்து இன்றுடன் ஆறு நாட்களாகிறது. இது வரை, டி.என்.பி.எஸ்.சி., சார்பில் வெளிவரும் அறிக்கைகள், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் பெயரிலேயே வெளிவருகின்றன. கவனக்குறைவாக செயல்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க தயங்குவது ஏன் என, தேர்வர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

கண்டுக்கவில்லை

இது குறித்து, போட்டித் தேர்வர்கள் கூறியதாவது:

இந்த சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்த, எந்தவித குழுக்களையும் அரசு அறிவிக்கவில்லை. பள்ளி பொதுத் தேர்வுகளில் தவறுகள் நடக்கும் போது, சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அரசு பணிக்கான தேர்வில் நடந்த இந்த குளறுபடியை, அரசு கண்டும் காணாமல் கடந்து செல்வது ஏன் என்பது தான் தெரியவில்லை.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

'தி.மு.க., அரசு நாடகம்'

பா.ம.க., தலைவர் அன்புமணி அறிக்கை:

கடந்த 9ம் தேதி நடக்க இருந்த 'குரூப் – 2' தேர்வு, அரசு பணியாளர் தேர்வாணையமான டி.என்.பி.எஸ்.சி., செய்த குளறுபடிகளால் ஒத்தி வைக்கப்பட்டது. அதை தொடர்ந்து, டி.என்.பி.எஸ்.சி., தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி சண்முகசுந்தரம் நீக்கப்பட்டு, வெங்கடபிரியா நியமிக்கப்பட்டதாக செய்தி வெளியானது.

ஆனால், இவை அனைத்தும் தமிழக மக்களை ஏமாற்ற, தி.மு.க., அரசு செய்த ஏற்பாடு என்பது அம்பலமாகியுள்ளது. தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி பணியில் இருந்து நீக்கப்பட்டதாகக் கூறப்படும் சண்முகசுந்தரம் தொடர்ந்து டி.என்.பி.எஸ்.சி., அலுவலகம் வந்து, வழக்கமான பணிகளை செய்து வருகிறார்.

வரும் 22ம் தேதி நடக்கவுள்ள குரூப் – 2 தேர்வுகளுக்கான நுழைவுச்சீட்டை பதிவிறக்கம் செய்வதற்கான அறிவிப்பு, நேற்று முன்தினம் சண்முகசுந்தரம் பெயரில் வெளியாகியுள்ளது. டி.என்.பி.எஸ்.சி., தேர்வு குளறுபடிகள் தொடர்பான விஷயத்தில், தமிழக மக்களை முட்டாள்களாக்கும் முயற்சியில் தி.மு.க., அரசு ஈடுபடக்கூடாது.

தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி, காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டாரா, இல்லையா? அவர் பணியில் தொடர அனுமதிக்கப்படுவது ஏன் என்பது குறித்து, அரசு விளக்கம் அளிக்க வேண்டும். தவறு செய்த அனைத்து அதிகாரிகளும் தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அரசின் இணையவழி சேவையில் கூடுதலாக 50 சேவைகள் இணைப்பு

சென்னை, பிப். 13–

அரசின் இணையவழி சேவையில், கூடுதலாக, 50 சேவைகள் இணைக்கப்பட உள்ளன.

தமிழக அரசு அறிக்கை: பொதுமக்களுக்கும், வணிகர்களுக்கும், அரசு துறைகளுக்கும் இடையே, 'எளிமை ஆளுமை' என்ற வகையில், அரசின் இணையவழி டிஜிட்டல் தளங்களில், நிர்வாக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தேவையற்ற வழிமுறைகள் மாற்றப்பட்டுள்ளன. அதாவது, 10 முக்கிய சேவைகள் சீரமைக்கப்பட்டன. இதன் வாயிலாக, சுற்றுச்சூழல் அனுமதி பெற, தேவையில்லாத, 'வெள்ளை வகை' தொழில்களின் எண்ணிக்கை, 37 ல் இருந்து, 609 ஆக உயர்ந்தது.

எளிமைப்படுத்தப்பட்ட 'ஆன்லைன்' நடைமுறைகள் வாயிலாக, 2 லட்சத்துக்கும் அதிகமான நன்னடத்தை சான்றிதழ்கள், 25,000க்கும் மேற்பட்ட சுகாதார சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. பொது கட்டடங்களுக்கான உரிமம் வழங்க, அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரின் கட்டட உறுதி சான்றிதழை பதிவேற்றம் செய்தாலே, தானியங்கி முறையில் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, முதல்வர் உழவர் பாதுகாப்பு திட்டம், மகளிர் முன்னேற்றம் மற்றும் சமூக நீதி, குழந்தைகள் இல்லங்கள் பதிவு செய்தல் என, 50க்கும் அதிகமான கூடுதல் சேவைகள் இணைக்கப்பட உள்ளன. மேலும், எளிமையாக்க வேண்டிய, அரசின் சேவைகள் தொடர்பாக, பொதுமக்கள் simplify@simplegovtn.in என்ற மின்னஞ்சலில், தங்களின் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கர்நாடக பா.ஜ., - எம்.எல்.ஏ., கைது
ரவுடி கொலை வழக்கில் நடவடிக்கை

பெங்களூரு, பிப். 13–

ரவுடி கொலை வழக்கில், பெங்களூருவின் கே.ஆர்.புரம் தொகுதி பா.ஜ., – எம்.எல்.ஏ., பைரதி பசவராஜ், நேற்று கைது செய்யப்பட்டார்.

கர்நாடகாவில், முதல்வர் சித்தராமையா தலைமையில், காங்., ஆட்சி நடக்கிறது. பெங்களூரு பாரதிநகரை சேர்ந்த ரவுடி சிவகுமார், 47, கடந்த ஆண்டு ஜூலை 15ல், நிலத்தகராறில் கொலை செய்யப்பட்டார்.

அவரது தாய் அளித்த புகாரில், கே.ஆர்.புரம் பா.ஜ., – எம்.எல்.ஏ., பைரதி பசவராஜ், அவரது ஆதரவாளர்கள் ஜெகதீஷ் உள்ளிட்டோர் மீது பாரதி நகர் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

வழக்கின் முதல் குற்றவாளியாக ஜெகதீஷ், ஐந்தாவது குற்றவாளியாக பைரதி பசவராஜ் சேர்க்கப்பட்டனர். வழக்கை சி.ஐ.டி., விசாரணைக்கு அரசு ஒப்படைத்தது. ஜெகதீஷை போலீசார் கைது செய்தனர்.

பாரதி நகர் போலீஸ் நிலையத்தில், பைரதி பசவராஜ் இரண்டு முறை விசாரணைக்கு ஆஜரானார். 'கொலைக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஜெகதீஷ் யார் என்றே தெரியாது' என்று கூறினார்.


சிவகுமார்


பைரதி பசவராஜ்

ஆனால், இருவரும் உத்தர பிரதேசத்தில் நடந்த கும்பமேளாவுக்கு சென்ற புகைப்படங்கள், 'மொபைல் போன்' அழைப்புகள் உள்ளிட்ட தொழில்நுட்ப ஆதாரங்களை போலீசார் சேகரித்தனர். பைரதி பசவராஜை கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

இதனால், தலைமறைவான பைரதி பசவராஜ் தாக்கல் செய்த முன்ஜாமின் மனு, உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடியானது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவும் நேற்று தள்ளுபடியானது.

இதையடுத்து, குஜராத் மாநிலம், ஆமதாபாத்தில் பதுங்கியிருந்த பைரதி பசவராஜ் நேற்று இரவு விமானத்தில் பெங்களூரு வந்தார். அங்கு காத்திருந்த சி.ஐ.டி., அதிகாரிகள், அவரை கைது செய்தனர்.

தேர்தலை புறக்கணிக்க தயார்: ரங்கசாமி
நாங்களும் தயாராக உள்ளோம்: தி.மு.க.,

புதுச்சேரியில் ஆச்சரிய அரசியல்

புதுச்சேரி, பிப். 13–

'மாநில அந்தஸ்திற்காக சட்டசபை தேர்தலை புறக்கணிக்க தயார்' என, புதுச்சேரி மாநில முதல்வர் ரங்கசாமி அறிவித்ததற்கு, தி.மு.க.,வும் ஆதரவு தெரிவித்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.


ரங்கசாமி

புதுச்சேரி 15வது சட்டசபையின் 6வது கூட்டத்தொடர் நேற்று கூடியது. நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி, ரூ. 5,396 கோடிக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார். கூட்டத்தில், இரட்டை இன்ஜின் அரசு என கூறினீர்கள். தேர்தல் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை.

இலவசங்களை மட்டும் மக்களுக்கு அளித்துள்ளீர்கள். வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்தவில்லை. மாநில அந்தஸ்துக்காக டில்லிக்கு அழைத்து செல்வோம்' என கூறினீர்கள். ஆனால் செய்யவில்லை. உங்களை நம்பி மக்கள் ஓட்டளித்தனர். மாநில அந்தஸ்துக்காக தேர்தலை புறக்கணிக்க என்.ஆர்.காங்., தயாரா என எதிர்கட்சித் தலைவர் சிவா கேள்வி எழுப்பினார்.

அப்போது முதல்வர் ரங்கசாமி குறுக்கிட்டு, 'தேர்தலை புறக்கணிக்க என்.ஆர்., காங்., தயார் தான். நீங்கள் தயாரா? மாநில அந்தஸ்து கேட்டு மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசை வலியுறுத்தி அனுப்புவோம்' என்றார்.

எதிர்கட்சித்தலைவர் சிவா பேசுகையில், 'தேர்தலை புறக்கணிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அனைத்து அரசியல் கட்சிகளையும் அழைத்து பேசி முடிவு செய்யுங்கள்' எனக் கூறினார்.

சட்டசபை தேர்தல் நெருங்கும் வேளையில் எதிர் எதிர் கூட்டணிகளில் உள்ள தி.மு.க., ஆளும் என்.ஆர்.காங்., கட்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது புதுச்சேரி அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் கிடப்பில் உள்ள சொத்துக்கள் ஏலம்

வீட்டுவசதி சங்கங்களுக்கு அவசரம் ஏன்

சென்னை, பிப். 13–

தமிழகத்தில் தற்போதைய நிலவரப்படி, 680 வீட்டுவசதி சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன. இதில், பல்வேறு சங்கங்களில் கடன் வசூல் பணிகள் முடங்கியுள்ளன. இதனால், வீட்டுவசதி சங்கங்கள் வருவாய் இன்றி தவிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால், வீட்டுவசதி சங்கங்களில் விற்காமல் கைவசம் உள்ள நிலம் உள்ளிட்ட அசையா சொத்துக்களை, பொது ஏலம் வாயிலாக விற்க, தமிழக அரசு கடந்த ஆண்டு ஒப்புதல் அளித்தது. இதன்படி, அத்தகைய சொத்துக்களுக்கு மதிப்பு நிர்ணயிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த பணிகள் முடிந்து பல மாதங்கள் ஆகியும், சொத்து விற்பனை பணிகளை, சங்க நிர்வாகிகள் மேற்கொள்ளாமல் இருந்தனர். தற்போது, ஒரே சமயத்தில், ஆறு மாவட்டங்களில், 17 இடங்களில் சொத்துக்களை ஏலம் விட, கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

கூட்டுறவு வீட்டுவசதி சங்க நிர்வாகி ஒருவர் கூறியதாவது: வீட்டுவசதி சங்கங்களில் இருப்பில் உள்ள சொத்துக்களை ஏலம் விட அரசு அனுமதித்தும், கடந்த ஓராண்டுக்கும் மேலாக அதிகாரிகள், இதற்கான பணிகளை துவக்கவில்லை. அடுத்த சில வாரங்களில் சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட உள்ள நிலையில், ஏல அறிவிப்பை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

வேலூரில், 6, சேலம், 4, தஞ்சாவூர், கோவை, விருதுநகர் மாவட்டங்களில் தலா, 2, திருச்சியில் ஒன்று என மொத்தம், 17 இடங்களில் சொத்துக்கள் ஏலம் விட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தால், இது தொடர்பான பணி முடங்க வாய்ப்புள்ளது. அந்தந்த பகுதியில் ஆளும் கட்சி பிரமுகர்களுக்கு ஆதரவாக செயல்படும் நோக்கில், சங்க சொத்துக்கள் ஏலம் விடப்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன.

இது குறித்து, துறையின் மேலதிகாரிகளுக்கு புகார்கள் சென்றுள்ளன. தேர்தல் சமயத்தில் அவசரகதியில் இந்நடவடிக்கை தேவையா என்பதை, அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

'காதலர் தினத்துக்கு தடை'

கோவை, பிப். 13–

இ.ம.க., தலைவர் அர்ஜுன் சம்பத் அறிக்கை: காதலர் தினம் என்ற பெயரில் இளைஞர், மாணவர் சமூகத்தை கெடுக்கும் கொண்டாட்டங்கள் நடக்கின்றன. இதற்கு தடை விதிக்க இ.ம.க. வலியுறுத்தியுள்ளது.

காதலர் தினம் என்ற பெயரில், பொது இடங்களில் மது அருந்துவதும், ஆபாசமாக நடந்து கொள்ளுவதும், பெண்களை கேலி செய்வது உள்ளிட்ட சட்ட விரோத காரியங்கள் நடக்கின்றன. காதலர் தின கொண்டாட்டங்களை தடை செய்யவேண்டும். டி.வி.க்கள், எப்.எம்.ரேடியோக்களில் காதலர் தின சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது என்று தமிழக டி.ஜி.பி.,க்கும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்துணவு ஊழியர்கள் 10ம் நாளாக போராட்டம்
அதிகாரிகள் பேச்சுக்கு அழைக்காததால் கோபம்

சென்னை, பிப். 13–

காலமுறை ஊதியம் வழங்கக்கோரி, 10 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை, சமூக நலத்துறையினர் பேச்சுக்கு அழைக்காதது, அவர்கள் இடையே கடும் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, ஊழியர்கள் கடந்த 3ம் தேதி முதல், காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பத்தாம் நாளாக நேற்று மாநிலம் முழுதும் நடந்த, வேலை நிறுத்தப் போராட்டத்தில், 15,000க்கும் அதிகமான ஊழியர்கள் பங்கேற்றனர். இதனால், தமிழகம் முழுதும், 5,000க்கும் மேற்பட்ட சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டன.

போராட்டம் குறித்து, கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் அமுதா கூறியதாவது: 'தி.மு.க., அரசு பொறுப்பேற்றால், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் தொகுப்பூதியத்தில் இருந்து, வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுவர்' என, முதல்வர் ஸ்டாலின், கடந்த சட்ட சபை தேர்தலின் போது வாக்குறுதி அளித்தார். அதை நிறைவேற்றக்கோரி, கடந்த 10 நாட்களாக தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

ஆனால், சமூக நலத்துறை அதிகாரிகள், எங்களை பேச்சுக்கு அழைக்கவில்லை. பொதுவாக போராட்டம் என்றால், அதிகாரிகள் ஊழியர்களுடன் பேச்சு நடத்தி தீர்வு காண்பார். சமூக நலத்துறையோ பாராமுகமாக உள்ளது. இதனால், பச்சிளம் குழந்தைகள், கர்ப்பிணியர் மற்றும் பள்ளி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இனியும் காலம் கடத்தாது, அரசு விரைந்து எங்களை அழைத்து பேசி, பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். இல்லையெனில், எங்கள் போராட்ட வடிவை மாற்றுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.